# அறிவுக் கூர்மையும் மனச்சாட்சியும்

## அறிவுக் கூர்மை

நகர்ந்து செல்லும் நிலவானது பொருட்களை இயக்கக் கூடிய சிருஷ்டிகர் ஒருவரை உறுதிப்படுத்துகின்றது என்றும், உயிர் வாழும் பொருட்கள் ஜீவனுள்ள ஒரு சிருஷ்டிகர் இருப்பதை உறுதிப்படுத்துகின்றன என்றும் கவனிக்கப்பட்டுள்ளது. உண்மைத் தன்மையின் இன்னொரு நிலையானது - பொருளை விட மேன்மையானது, இயக்கத்தை விட மேன்மையானது, வாழ்வை விட மேன்மையானது - அறிவுக் கூர்மையாகும். அறிவுக் கூர்மையை மற்றவர்களுக்கு அளிக்கின்ற ஒருவர் அறிவுக் கூர்மையற்றவராக இருக்கின்றார் என்பது தெளிவான சிந்தனையாகக் கருதப்பட மாட்டாது.

ஜீவனைப் பொறுத்தமட்டில், மனித அறிவுக் கூர்மை என்பது ஜீவனை விட எவ்வளவோ மேன்மையானதாக உள்ளது. மனித சிந்தனையானது அறியப்படாத அதன் வலிவுடன் கூட, பெரும் வியப்புக்குரியதாக உள்ளது. இவான் யெஃப் ரெமோவ் என்ற ரஷ்ய நாட்டுக் கல்வியாளர் பின்வருமாறு எழுதினார்:

> *மானிடவியல், உளவியல், அளவையியல் மற்றும் உடலமைப் பியல் ஆகியவற்றில் கடைசியான கண்டுபிடிப்புகள் மனித சிந்தையின் வலிவு மகா பெரியது என்பதைக் காண்பிக்கின்றன. மனித மூளையின் வடிவமைப்பு மற்றும் பணி பற்றிய சில புரிந்து கொள்ளுதல்களை நவீன விஞ்ஞானம் நமக்குத் தந்த உடனேயே மூளையின் தேக்கி வைக்கும் திறனின் ஏராளமான அளவு நம்மைத் திகைக்கச் செய்கின்றது. பணி மற்றும் ஜீவனின் சராசரி நிலைமைகளின் கீழ் மனிதர் தம் சிந்திக்கும் கருவியின் மிகச் சிறிய பாகத்தையே பயன்படுத்துகின்றார். நாம் யாவரும் நமது மூளையை அதன் திறனில் பாதியளவு மட்டுமே வேலை செய்யும்படியாக வலியுறுத்த முடிந்தால், நாம் யாவரும் எவ்வித சிரமும் இன்றி 40 மொழிகளைக் கற்றுக் கொள்ள முடியும், என்சைக்ளோபீடியா என்னும் உலக அகராதி புத்தகத்தை முன் அட்டையிலிருந்து பின் அட்டை வரை மனப்பாடம் செய்து விட முடியும், மற்றும் கல்லூரிகளின் டஜன் கணக்கான பாடங் களை படித்து முடித்து விட முடியும்.*[1]

மனித மூளை என்பது 14 கோடி அலகுகள் உள்தொடர்புடைய, வினோதமான இயற்கைக் கணணி ஆகும், இது ஒன்று மட்டுமே இயற்கை

யின் செயல்பாடுகளில் நிகழ்ந்த தற்செயல்களின் ஒரு வரிசையினால் பெறப்பட்ட ஒரே கணணி என்று வல்லுநர்களால் கருதப்படுகின்றது. பிரென்ச்சு தத்துவ ஞானியும் கணக்கியல் வல்லுநருமான பிளெய்ஸ் பாஸ்கல் என்பவர், "மனிதன் ஒரு நாணலைப் போல, இயற்கையின் மிகப் பலவீனமான பொருளாக உள்ளான்; ஆனால் அவன் சிந்திக்கும் நாணலாக இருக்கின்றான் ... இந்த அண்டமானது அவனைக் கொல்ல வேண்டி வந்தாலும், அப்பொழுதும் மனிதன் தன்னைக் கொலை செய்யும் இந்த அண்டத்தைக் காட்டிலும் மேன்மையானவனாகவே இருப்பான், ஏனெனில் அவன் தான் மரிக்கின்றதை அறிகின்றான்; மற்றும் இந்த அண்டத்தின் பயனானது அவன் மேல் உள்ளது, அண்டம் எதையும் அறிவதில்லை. இவ்விதமாக சிந்தனையில் எல்லா மேன்மையும் அடங்கியுள்ளது" என்று எழுதினார்.

மனித சிந்தனையின் திறமையானது சார்லஸ் டார்வின் என்பவரைக் கொஞ்சம் குறைய ஆத்திகராக்கிற்று. மனித மூளையானது, "தொலை தூரம் பின்னாலும் (கடந்த காலத்தையும்), மற்றும் தொலை தூரம் முன்னாலும் (எதிர் காலத்தையும்) காணக் கூடிய ஆச்சரியமான திறன் கொண்டுள்ளது, இது மனிதனுடன் ஒப்பிடத் தக்க வகையில் அறிவுக் கூர்மையுள்ள முதல் காரணம் ஒன்று இருப்பதை" அவன் யூகிக்கும்படி வற்புறுத்தியது என்று அவர் எழுதினார். மேலும் அவர், "நான் ஒரு ஆத்திகன் என்று அழைக்கப் படுவதற்குத் தகுதியுள்ளவனாய் இருக்கிறேன்" என்றும் கூட எழுதினார். இருப்பினும், மனித மனமானது "மிகவும் கீழான விலங்குகளிடமிருந்த ஒரு மனதிலிருந்து" முன்னேறி வளர்ந்தது என்று அவர் கருதிய பொழுது, மனிதன் நம்பிக்கை கொள்ளப்படுவதற்கு வழி நடத்தப்பட முடியும் என்ற "மாபெரும் முடிவுகளை" அவர் சந்தேகப்பட்டார்.[2] இவ்விதமாக, டார்வின் தனது மனம் கூறியது இவ்வாறுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்தார் ஏனென்றால் அவர் தனது மனம் அவ்வாறு கூறும் திறமை கொண்டுள்ளது என்பதை அவர் கருதாதிருந்தார்.

மனம் எதனால் ஆனதாக உள்ளது? அறிவியல் அறிஞர் ஒருவர், அறிவுக் கூர்மை என்பது, "குறைவான பண்பும் மற்றும் பலவீனமான வலிவும்" கொண்ட உள்ளான "மனப் பண்புகளுடன்" உள்ள "அடிப்படைத் துகள்களில்" (இது தோற்றத்தை மறைமுகமாய்க் குறிப்பிடுகின்றதா?) இருந்து எழுந்ததாகும் என்று நிரூபணமற்ற வகையில் கூறியுள்ளார். இப்படிப்பட்ட வடிவமைப்புகள் யூகிக்கப்பட்டவைகளாகவே இருக்க வேண்டும், இல்லையென்றால், "எந்தப் பொருள் அமைப்பிலிருந்தும் எப்பொழுதாவது மனச்சாட்சி உதிக்கக் கூடுவது எவ்விதம் என்பதை நான் புரிந்து கொள்ளத் தவறி விடுவேன்"[3] என்று டார்வின் கூறினார். மனித மனச்சாட்சி என்பது "வரலாற்றுக்கு முந்திய பதனிடப்படாத உயிரொளியின் (அதாவது, ஒரு பரிணாம ஒளித்துகளின்) தூய்மையாக்கப்பட்ட பின் சந்ததியாகும்" என்ற "கற்றுத் தேர்ந்த இன்னொரு கருதுகோள்" உள்ளது. இவ்வித மொழிநடையானது ஆழ்ந்த ஒரு மனப்பதிவை ஏற்படுத்தலாம், ஆனால் இது, விசாரித்தறியும் மனதிற்கு விடையெதையும் விட்டுச் செல்வதில்லை.

விசாரித்தறியும் மனமானது ரினே டெக்கார்ட்டேயின் (1596-1650) பின்வரும் வார்த்தைகளில் ஒரு பகுதி விடையைப் பெற்றுக் கொள்கின்றது: "எனது இருப்பிற்கான காரணம் என்று முடிவில் எது குறிப்பிடப்பட்டாலும், அது ஞானமுள்ள சிந்திக்கும் பொருள் என்று இருக்க அனுமதிக்கப்பட வேண்டும்."[4] படைக்கப்பட்டது சிந்திக்கும் பொருளாய் இருந்தால், அவரை(படைப்பை)ப் படைத்தவர் நிச்சயமாகவே அதை(சிந்தித்தலை)ச் செய்யக் கூடியவராய் இருக்க வேண்டும். "விளைவில் உள்ள உண்மைநிலை போன்றே குறைந்த பட்சமாவது காரணத்திலும் இருக்க வேண்டும்"[5] என்று டெக்கார்ட்டே தொடர்ந்து கூறினார். மனித அறிவுக் கூர்மை மற்றும் ஆளுமைத் தன்மையானது அவனைப் படைத்தவரின் "அறிவுக் கூர்மையையும் ஆளுமைத் தன்மையையும் நமக்கு வெளிப்படுத்துகின்றது" என்று டெக்கார்ட்டேயைக் காட்டி லும் அதிக நவீனமான சிந்தனையாளர் ஒருவர் கூறினார்.[6] மனிதன் தேவனைப் பற்றிய உணர்வுள்ளவனாக இருக்க முடியும் ஆனால் தேவன் அவனை(மனிதனை)ப் பற்றிய உணர்வுள்ளவராக இருக்க முடியாது என்று கூறுவது அர்த்தமற்றதாகும். உணர்வின் மூல ஆதாரமானது உணர்வற்றதாக இருக்க முடியாது. இவ்விதமாக மனித மனச்சாட்சியும் ஆளுமைத்தன்மையும் தேவனுடைய குறைவில்லாத ஆளுமைத்தன்மையை விட மேலானதை உறுதிப்படுத்துகின்றன.

## மனச்சாட்சி

நகரும் நிலவானது தேவன் உயிருள்ளவர் என்று காண்பிப்பதில்லை, ஆனால் ஒரு மரம் அதைக் காண்பிக்கின்றது. ஒரு மரமானது தேவன் ஒரு நபர் என்று காண்பிப்பதில்லை, ஆனால் மனிதரின் ஆளுமைத் தன்மை அவ்வாறு செய்கின்றது. அது போலவே, மனிதரின் மனச்சாட்சி, அவரது கடமை உணர்வு, ஆகியவை தேவன் மதிப்பீடுகள் உடையவர் என்று காண்பிக்கின்றது. ஒழுக்கமதிப்பீடுகளைக் கொடுத்தவர் ஒழுக்கமுள்ள நபர் என்பதற்குக் குறைவானவராய் இருக்க முடியாது.

மனிதருடைய ஒழுக்க இயல்பானது விலங்குகளில் இருப்பதாகத் தோன்றவில்லை. மனிதர்கள், தங்கள் வாழ்வில் "அதிகாரமும் முழுமைத் தன்மையும் கொண்ட புலன் கடந்த வேண்டுகோள் ஒன்று" மதிப்பு மிக்க வகையில் உரிமைகோருவதைப் பற்றி அறிந்துள்ளனர்.[7] மனிதக் குரங்கொன்று பேச முடிந்தால், "நான் (இவ்வாறு இருக்க) விரும்புகிறேன்" என்று கூறும்; ஆனால் மனிதர் "நான் இவ்வாறு இருக்க வேண்டும்" என்றே கூறுகின்றார்.

தாமஸ் H. ஹக்ஸ்லீ (1825-95) என்ற விசுவாசியாத மனிதர், தமது மகன் இறந்த பொழுது, அழியாமைக் கருத்தில் ஆறுதல் பெற மறுத்து விட்டார், ஏனென்றால் அவர் "வேகமாய்ச் செயல்படவும் சத்தியத்திடம் (தன்னை) இழந்து விடவும்" மறுத்தார்.[8] இருப்பினும், ஹக்ஸ்லீ தாம் நம்பியபடியாக தோற்றக் கால ஊற்றின் வெறும் சந்ததியாக மட்டும் இருந்தால் சத்தியம் என்ன மாறுபாட்டை ஏற்படுத்தப் போகின்றது? ஹக்ஸ்லீயினுடைய, சத்தியத்திற்கான பற்றுறுதியின் உணர்வானது அவரது களிமண் உடலி

லிருந்து பெறப்படவில்லை. நேர்மை என்பது ஒரு மூட்டை இரசாயனப் பொருட்களால் அறியப்படாததாக உள்ளது. ஒழுக்க உணர்வை மனிதருக்குள் வைத்தவர் தம்மில் ஒழுக்க உணர்வற்றிருக்கிறார் என்று யூகிப்பது தர்க்கப் பொருத்தமற்றதாகும்.

நன்மை தீமையைப் பற்றிய மனிதனின் உள்ளான பகுத்தறிவை பெர்ட்ராண்டு ரஸ்ஸல் (1872-1970) அடையாளம் கண்டு புரிந்து கொண்டார், ஆனால் அந்தப் பகுத்தறிதலை மனிதனுக்குள் வைத்த வல்லமைக்குச் சிந்திக்கும் திறன் இருந்ததில்லை என்று அவர் நம்பினார். "இயற்கையில் உள்ள வினோதமான ஒரு அற்புதம் என்னவென்றால், அது சர்வ வல்லமையுள்ளது ஆனால் பார்வையற்றது, ... பார்வை என்ற வரத்துடன், நன்மை தீமை அறியக் கூடிய அறிவுடன், சிந்திக்காத தனது தாயின் (இயற்கையின்) எல்லாப் பணிகளையும் தீர்ப்பிட்டு நிதானித்து அறியக் கூடிய திறமையுடன் உள்ள ஒரு குழந்தையைக் கடைசியாகக் கொண்டு வந்தது."[9] அவரைப் பொறுத்தவரை, பார்வையற்ற, சிந்தையற்ற அறியப்படாத வம்சா வழியுடைய ஒரு தாய் பார்வையுள்ள, சிந்திக்கின்ற மற்றும் ஒழுக்கமான ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கிறாள்.

இம்மானுவேல் கான்ட், வானங்கள் மற்றும் ஒழுக்க விதி பற்றிய தமது கருத்தை புரிந்து கொள்ளக் கூடிய வியப்பினால் பல மக்களின் மனதில் ஆழப் பதியச் செய்தார். "இரண்டு விஷயங்கள் என்னில், தொடர்ந்து வளரும் மதிப்பையும் நீண்ட மரியாதையையும் நிரப்புகின்றன மற்றும் அவைகளின்மீது நான் மிகவும் ஊக்கத்துடன் மறு சிந்தனை செய்கின்றேன் - அவை விண்மீன்கள் நிறைந்த வெளியில் உள்ள ஆகாயங்களும் மற்றும் உள்ளாக உள்ள ஒழுக்க விதியும் ஆகும்." கான்ட் மனிதனிடம் "இருக்க வேண்டிய" வகைப்படுத்தப்பட்ட கண்டிப்பான விஷயங்களை தேவனுடைய இருப்பிற்கான ஒரு நிரூபணமாக தாம் ஏற்படுத்துமளவுக்கு மிக முக்கியமானதாகக் கருதினார். தேவனுடைய இருப்பிற்கான மிகச் சிறந்த விவாதங்களை அவர் மிகவும் அதிகமாக விமர்சித்த போதிலும், அதுவே மனிதனுடைய ஒழுக்கத்தின் நற்தன்மையை நிறைவு செய்கின்றது மற்றும் அதனாலேயே அவனது மகிழ்வானது "இந்த விளைவுக்குப் போதுமான ஒரு காரணத்தை," "ஒரு அறிவுக் கூர்மையை (பகுத்தறிவுள்ள ஒருவரை)," ஒரு ''மிக மேன்மையான அறிவுக் கூர்மையை'' கேட்பதாயுள்ளது என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.[10]

இதைப்பற்றி சாதாரணமான வகையில் விவாதம் செய்பவர்களைக் குற்றம் சாட்டுமளவுக்கு அவர் அந்த நபரின் (தேவனின்) இருப்பை மிக உறுதியாகக் காண முடிந்திருந்தது: சுத்த மனக் கருத்துக்களுக்கு, உணர்வுலகத்திற்கு அப்பால் நோக்குதல். இருப்பினும் சாதாரணமான விவாதம் செய்வதைப் பயன்படுத்துபவர்கள் உலகத்தை உண்டாக்கியவருக்கு, உணர்வுகளின் உலகத்திற்கு அப்பால் பின்னோக்கிப் பார்க்கின்றனர், இவர்கள் "மெய்ப் பொருள் தொடக்கம் பற்றிய தவறினை" செய்வதில்லை மற்றும் கான்ட்டும் கூட உணர்வுலகிற்கு அப்பால் முன்னோக்கிக் காண்பதென்பதை ஒழுக்கமுள்ள மனிதரின் மகிழ்ச்சிக்கு செயல் விளைவிக்கும் இன்றியமையாத விஷயமாய் இருப்பதாகச் செய்யவில்லை.

காண்ட் அவரை, "பரிசுத்த சட்டம் அளிப்பவர்," "நியாயமான நீதிபதி" மற்றும் "நல்ல ஆளுநர்" என்று பேசுகையில் பரவச நிலைக்குட்பட்டார்.[11]

எரிக் ஃபிராங்க் என்பவர் மனோபாவத்தில் எவ்வளவு வித்தியாசமான வராக, மிகவும் பரிதபிக்ககூடிய நிலையிலிருந்து, தாம் ஒரு "ஒழுக்கக் கண்ணோட்டம்" கொண்டிருந்ததாகவும், ஆனால் தம்மையே தாம் "முழுமையான புலன் கடந்த எதிர்ப்பு நிலையில்" காத்துக் கொண்டதாகவும் ஒத்துக் கொண்டார். அவர், "நிறைவான கொள்கை என்பதை நான் முற்றிலு மாக எதிர்த்து, அதை நான் இழிவாகக் கருதுவேன்" என்று அறிவித்தார்.[12]

ஒருவேளை, அழியக் கூடிய வேறு யாரையும் போலின்றி, காண்ட் என்பவர் மனிதர்கள் மத்தியில் உள்ள நற்சிந்தையின் பலம் மற்றும் மதிப்பினால், மனித இனத்திற்கு உதவும் வகைப் படுத்தப்பட்ட கண்டிப் பான விஷயங்களினால், உலகளாவியது என்று ஒருவர் நம்பும் கொள்கை களின் மீதே எப்பொழுதும் ஒருவர் செயல்படுவதினால் ஆழமாக அசைக்கப்பட்டிருக்கலாம். அவர் தனிப்பட்ட முறையில் உலகின் மிகச் சிறந்த மனிதர்களில் ஒருவராக இருக்கலாம். இருப்பினும், மதிப்பீடுகள் பற்றிய சுத்தமான சுயநலமின்மை பற்றிய அவரது உயர்ந்த புலன் உணர்வானது, "மெல்லிய, கூழ்மப் பொருள்," "துடிக்கும் நுரை" அல்லது "தோற்றத்திற்கு முந்திய ஊற்று" என்பவற்றிற்கு விளக்கம் எதையும் கொண்டிருப்பதில்லை.

பொருளானது நற்பண்பையும், மற்றும் அன்பையும் உருவாக்க முடிந்ததென்றாலும், பல்லினாலும் நகத்தினாலும் மிருகத்தனமாய்ப் பிழைக்கத் தகுதியுள்ளதாய், பலமுள்ளது மாத்திரமே உயிர் பிழைக்க முடியும் என்ற நிரூபணமற்ற பரிணாமக் கொள்கையின் உலகில் அவைகளுக்கு இடம் இருக்காது. மதிப்பீடுகள் பற்றிய உணர்வுடைய யாரோ ஒருவர் தாம் அதே உணர்வை காண்ட் என்பவருக்குள் வைத்தார் என்பதே கருத்து ஏற்படுத்தக் கூடிய ஒரே விளக்கமாக உள்ளது. இரவைத் தொடர்ந்து பகல் வருவது போல, இதைத் தொடர்ந்து, அண்டத்தைப் படைத்தவர் ஒரு கட்டுமானம் செய்பவரைக் காட்டிலும் மேலானவர் என்ற கருத்து வருகின்றது; அவர் உயிருள்ளவர், அவர் அறிவுக் கூர்மையுள்ளவர், மற்றும் அவர் நல்லவர்.

## அவர் எவ்வகைப்பட்ட தேவனாக இருக்கின்றார்?

"தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வ வல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக் கூடுமோ?" (யோபு 11:7). முழுமையில், இந்த வினாவிற்கான விடை எதிர்மறையாகவே இருக்க வேண்டியுள்ளது, ஏனெனில் தேவன், "ஆராய்ந்து முடியாத பெரிய காரியங் களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் ... செய்கிறார்" (யோபு 5:9). இருந்தாலும், மலர்த் தோட்டத்தினூடே ஒருவர் நடந்து செல்லுகை யில், அவர் அந்த தோட்டக்காரரை அறியாவிட்டாலும், அவரை (அந்தத் தோட்டக்காரரை)ப் பற்றிய திட்டவட்டமான விஷயங்களை அவர்

அறிகின்றார். இதே வழிமுறையில், பகலிலோ அல்லது இரவிலோ ஆகாயத்தை நோக்கிப் பார்க்கும் எந்த ஒரு சாதாரண நபரும் வல்லமையுள்ள சிருஷ்டிகரும் வடிமைப்பாளருமான ஒருவருடைய கைவேலையைக் கண்டாக வேண்டும் (சங். 19:1-3ஐக் காணவும்).

இயக்கமற்ற பொருளின் படைப்பில் ஒருவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வல்லமை நிறைந்த படைப்பாளர்களைக் காண முடியும். கோள்களின் இயக்கங்களை இயக்கும் சட்டங்கள் யாவற்றின் உறுதியான ஒன்றிப்பில் ஒருவர், அநேக உதவியாளர்கள் இருப்பினும் ஒரே சிருஷ்டிகர் உள்ளார் என்றும், ஒரே சிந்தையே முழுவதையும் இயக்குகிறதென்றும், உய்த்துணர முடியும். மேலும், வாழ்வின் எந்த வடிவத்தையும் படைப்பவர் தாம் ஜீவனுள்ளவராய் இருக்க வேண்டும் என்பது தர்க்கவியல் ரீதியான தனித்துவக்கும் முடிவாக உள்ளது. உயிர் வாழ்பவர் ஒருவர் சுய உணர்வுள்ள நபராய் உள்ளார் என்றால், அவரைப் படைத்தவர், தாம் படைத்தவற்றைக் காட்டிலும் குறைவானவராய் இருக்க முடியாது என்று ஒருவர் கூற முடியும். அது போலவே, சுய உணர்வுள்ள நபர் ஒழுக்க உணர்வு ஒன்றைக் கொண்டிருப்பாரென்றால், அவரைப் படைத்தவர் அதைவிடக் குறைவாய் இருப்பார் என்று நினைப்பது தர்க்கப் பொருத்தமற்றதாகும். ஒருவர், படிப்படியாக, உண்மைத் தன்மையின் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குச் சென்று, தாம் ஒருபோதும் கண்டிராத சிருஷ்டிகரைப் பற்றிக் கற்கின்றார், மற்றும் அதிகம் அறிய ஆவலுள்ளவராய் இருக்கின்றார்.

தேவன் அன்பாக மட்டுமே இருக்கிறார் அல்லது சுத்த ஆவிக்குரிய தன்மையில் மட்டுமே இருக்கிறார் - ஒரு கற்பனைக் கருத்தாய் இருக்கிறார் (பிளேட்டோ) அல்லது தாடி வைத்த ஒரு முதிய மனிதராக அல்லது மனிதரின் படைப்பில் இருக்கிறார் (செனோபேனஸ்) அல்லது மனித மனதின் ஒரு நீட்சியாக இருக்கிறார் (லுட்விக் பெயூர்பாக்) அல்லது விருப்பம் நிறைந்த சிந்தனையாக இருக்கிறார் (சிக்மன்ட் பிராய்டு) அல்லது இறந்து விட்டார் (பிரெடரிக் நீட்சே) அல்லது நமது இருப்பின் அடித்தளமாக மட்டும் இருக்கிறார் (பவுல் டில்லிச்) அல்லது நமது இயலாமையின் குறைபாடுகளின் உணர்வுகளைக் கொண்டு தொடப்பட முடியாதவராக இருக்கின்றார் என்று கூறுகின்றவர் எவரும் இந்த சாட்சியம் யாவற்றையும் கவனிக்காதவராகவே இருக்கின்றார். “காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ?” (சங். 94:9). மனிதனுக்குள் ஆழமான உணர்வுகளை வைத்தவர், உணராதிருப்பாரோ?

---

குறிப்புகள்

[1]Ivan Yefremov, “The Human Brain God Made,” *20th Century Christian* (August 1970): 8. [2]Francis Darwin, ed., *Life and Letters of Charles Darwin* (New York: D. Appleton & Co., 1911), 1:282. [3]D. F. Lawden, University of Canterbury at Christ-church, New Zealand; quoted in John Lear, “The Future of God,” *Saturday Review* (29 August 1964): 184. [4]René Descartes, *Descartes Selections,* ed. Ralph M. Eaton (New York: Charles Scribner’s Sons, 1927), 123. [5]Ibid. [6]*The Encyclopedia Americana,* 1962 ed., s.v. “Theism,” by H. W. Wright. [7]John Hick,

*Classical and Contemporary Readings in the Philosophy of Religion* (Englewood Cliffs, N.J.: Prentice-Hall, 1965), 471. [8]David Elton Trueblood, *Philosophy of Religion* (New York: Harper & Bros., 1957), 108. [9]Bertrand Russell, *Mysticism and Logic* (New York: Barnes & Noble, 1959), 48. [10]Immanuel Kant, "Theory of Ethics," in *Kant Selections,* ed. Theodore Meyer Greene (New York: Charles Scribner's Sons, 1957), 360-67.

[11]Ibid., 367. [12]Geddes MacGregor, *Introduction to Religious Philosophy* (Boston: Houghton Mifflin Co., 1959), 120.

---

## *"பரிசுத்தமானவர்"*

*தேவன் Qadosh,[1] "பரிசுத்தமானவர்" என்று அழைக்கப்படுகின்றார். இவ்வார்த்தையானது, "பிரித்து வைத்தல், தனியே வைத்தல், பரிசுத்த மாயிருத்தல்" என்ற ஒரு அடிப்படை அர்த்தத்திலிருந்து வருகின்றது. அவர் பரிசுத்தமாயிருப்பதால் எந்தப் பொல்லாங்குடனும் அவர் இணைவாய் இருக்க முடியாது. "நீர் துன்மார்க்கத்தில் பிரியப்படுகிற தேவன் அல்ல; தீமை உம்மிடத்தில் சேர்வதில்லை" (சங். 5:4). "தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக் கொண்டிருக்க மாட்டீரே ..." (ஆபகூக் 1:13) இதற்கு மாறாக, புறதெய்வக் கொள்கைக்காரரின் கடவுள்கள் தீமையுடன் இணைந்திருந்தனர். யேகோவாவின் மாண்புமிக்க சுத்தத் தன்மையானது உண்மையான தேவனுடைய தனித்தன்மையாய் உள்ளது. கர்த்தருடைய இந்தப் பண்பானது சேராபீமினாலும் ("சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்"; ஏசா. 6:3), மற்றும் நான்கு ஜீவன்களினாலும் ("சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்"; வெளி. 4:8) ஓயாது துதிக்கப் படுகின்றது. தேவன் தாம் பரிசுத்தராய் இருப்பதால் இஸ்ரவேலரையும் (லேவி. 11:44, 45) மற்றும் கிறிஸ்தவர்களையும் (1 பேது. 1:16) தங்களைப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ளும்படி வேண்டினார்.*

---

குறிப்பு

*[1]"தேவன்" மற்றும் "கர்த்தர்" என்பதற்குள்ள வார்த்தைகளைப் போன்றே, Qadosh என்ற சொல் விளக்கமும் நீதி. 9:10; 30:3 மற்றும் ஓசி. 12:2, 13 ஆகிய வசனங்களில் பன்மை வடிவத்திலேயே உள்ளது, ஆனால் அதை "பரிசுத்தமானவர்கள்" என்று மொழிபெயர்க்கலாம் என்று ஒருவரும் நினைத்துப் பார்க்க மாட்டார்கள். மரியாதைப் பன்மை (அதாவது கனம் அல்லது கம்பிரம் என்பதைச் சுட்டிக்காட்டப் பயன்படும் பன்மை வடிவம்) உள்ளதென்பது உறுதியாகும்.*